உ

ஓம் நமோ பகவதே நித்யானந்தாய.

ஸ்ரீ சிவானந்த ஞானமிர்தம்

இது

திருவண்ணாமலை

மஹான் ஸ்ரீ சிவானந்த முனிவரவர்கள்

அருளியது.

8376

திருவருணை

...ரமத்தாரால் பிரசுரிக்கப்பெற்றது.

முதல் பதிப்பு.

உ

ஓம் நமோ பகவதே நிர்வாணாநந்தாய.

ஸ்ரீ சிவானந்த ஞானாமிர்தம்

இது

திருவண்ணாமலை

மஹான் ஸ்ரீ சிவானந்த முனிவரவர்கள்

அருளியது.

திருவருணை

ஸ்ரீ சிவானந்தாஸ்ரமத்தாரால் பிரசுரிக்கப் பெற்றது.

முதல் பதிப்பு

காபிரைட்] 1945 [விலை 0-8-0

நூன்முகம்

"ஞானாமிர்தம்" என்ற இந்நூல் திருவருணை ஸ்ரீ சிவானந்த முனிவரால் இயற்றப்பெற்றது. நூல் ஆரம்பத்தில் காணும் சரிதச் சுருக்கத்திலிருந்து இவர் அதி பால்யத்திலேயே துறவடைந்து, உலக சஞ்சாரம் செய்து, பல பெரியோர்களைச் சந்தித்து, பல்வேறு சமய மத ஆசாரங்களையும் அனுபவ பூர்வமாக உணர்ந்து, நிறைந்த சாதன சம்பத்துக்களும் கைவரப்பெற்று, உள்ளந் தெளிவடைந்தவரென்று தோன்றுகிறது. ஸ்ரீ முனிவரது வாழ்க்கையின் மற்ற விவரங்கள் சரித்திரத்தால் புலனாகும்.

இந்நூலில் வரும் உபதேச வாக்கியங்கள் ஸ்ரீ முனிவர் தமது சீடர்களின் ஆத்மரக்ஷையின் பொருட்டு வெளியிட்ட தமது சொந்த அனுபவங்களெனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு உபதேசமும் எளிய நடையில் அரிய பொருளையுடையதாயும் ஆன்மதாகம் மேலிட்டோர் தற்சமயம் அனுஷ்டித்துவரும் பல்வேறு சாதனங்களின் உட்கருத்துக்களை விளக்கி முடிவான ஆத்ம சாட்சாத்கார நிலையைச் சந்தேக விபரீதங்களுக் கிடமின்றி விளக்கிக் கூறுவதாயும், சிறப்பாகச் சாதகர்கள் சன்மார்க்கத்தைப் பரிபூர்ணமாய்க் கடைப்பிடித்தற் கேதுவான நல்லொழுக்கங்களை அடிக்கடி வலியுறுத்துவதாயும் அமைந்திருத்தலால், அத்யாத்ம வாழ்வை நாடிச் செல்வோர்க்குப் பெரிதும் உதவி செய்யக் கூடியவாறு இந்நூல் ஓர் வழிகாட்டியாக விளங்குமாறு திருவருள் துணைபுரிவதாக.

திருவருணை
1—4—44

இங்ஙனம்
நடனானந்தன்.



மஹான் ஸ்ரீ சிவானந்த முனிவர்

திருவண்ணுமலை

உ

ஓம்

மஹான் ஸ்ரீ சிவானந்த முனிவரவர்கள்

வரலாற்றுச் சுருக்கம்

(நேரிசை ஆசிரியப்பா)

அன்பாம் சிவத்தை அமிழ்தெனக் கொண்டு
இன்புரு வானநம் எழில்மணி வாசகர்
மாய வாழ்வெனும் மயக்கத் தீயில்
ஓயா துழலும் உலகீர் கேண்மின்!
என்னாட் டவர்க்கும் இறையா ரென்னில்
தென்னா டுடைய சிவமென அருளினர்
அத்தென் னாட்டில் அமிழ்தாம் தமிழை
இத்தரை புகழ இனிதுற வளர்த்த
பாண்டியர் சிவமணம் பண்புடன் கமழ
ஆண்டநற் பாண்டிய நாடாம் அதனில்
பூவினில் யாவரும் போற்றும் சிறப்புடை
கோவிலாங் குளமெனும் குணம்நிறை ஊரில்
விசுவப் பிராமண விழைகுலம் சிறக்க
நாத்திகப் பேய்க்கணம் நடுங்கி யோட
ஆத்திகத் தீபம் அருட்சுடர் விரிய
கண்மூடித் தனமெலாம் மண்மூடி மறைய
அன்பாம் சிவத்தின் அருள்மணங் கமழ
புன்புலால் உடலைப் பொன்னுட லாக்கி
இன்புறு யோகம் எண்ணிலா அருள
பவக்கடல் மீளத் தவம்பல காட்ட
சிவக்கடல் அமிழ்தில் சேர இவ்வுலகம்

அன்பு கசிந்த ஆரா அமுதாய்
பன்னெடு நாள்நாம் பான்மையில் செய்த
அளப்பருந் தவத்தால் அருட்சிவ அளியால்
உலகினை விளக்கும் ஓரொளிப் பிழம்பாய்
பிங்கள ஆண்டில் பெருந்தண் ஐப்பசியில்
விசாக மீனில் வியாழநற் கிழமையில்
வேலா யுதரும் வேத வல்லியும்
காலம் பலவால் கண்டநற் றவத்தால்
தவானந் தத்தின் தனிப்பெரும் உருவாய்
சிவானந்த முனிவச் செம்மைசால் பெரியோர்
அடியோம் உய்ய அவதரித் தருளினர்
மண்ணினர் மகிழ்ந்து மகிழ்ந்து ஏத்தினர்
விண்ணினர் ஆசிபல் விரைந்து செய்தனர்
இளம்பரிதி விரிவு எத்தனை விரிவு
அதனினும் விரைந்தது அறிவொளி இவர்க்கே
ஒருமூன் றாண்டில் உலகியல் நூற்கலை
கற்றனர் தாமே கமுதியாம் ஊரில்
ஈரிரண் டாண்டில் எண்ணிலாச் சாத்திரம்
தெரிவுறக் கற்றுத் தெளிந்தனர் சிறந்தனர்
கயிலாய பரம்பரை கயாநகர் முனிவர்
செயிர்தீர் ஞானம் செப்ப மலர்ந்தனர்
தானுண் டுடுத்துத் தன்மனை மக்களைப்
பேணுதல் அன்றுஇப் பிறப்பெனக் கூறி
தன்னையே துறந்து தனிப்பெரும் அன்பொடு
முன்னினர் தொண்டில் முறுவல் பூத்திட
இன்சொல் தேனாய் இயம்புவர் அதனை
எத்தனை மன்றம் எத்தனை அவையே
எத்தனை எத்தனை எண்ணரும் பற்குழு
அனைத்தும் செவியால் ஆரப் பருகி

இளைத்தன இல்ல ஞானம் எய்தின
எய்திநல் வீட்டை எய்திட முயன்றன
மூர்த்தி தலத்தீர்த்தம் முறைமையில் வணங்க
யாத்திரை சென்றனர் அகில மெங்கணும்
அறைகூவி வீடருள் அண்ணு மலையாம்
இறைகூவி அழைக்க எம்மான் போந்தனர்
ஆட்கொண்ட அன்னுர் அடிக்கீழ் உறைந்திட
நாட்கொண்ட வாழ்வை நாடினர் பாடினர்
இருளஞ் ஞானம் இரிய ஓட்டிய
அருள்வடி வாய்நிமிர் அண்ணு மலையில்
ஆழும் அன்பொடு அருந்தவர் வாழ்ந்த
ஏழு சுனையிடை இயலும் குகையில்
ஜெகமெனும் இருட்கான் சென்றுநாம் இனிமேல்
புகுந்திடா வண்ணம் புகுந்தினி தமர்ந்து
பெண்டாய் பிள்ளையாய் பெருகும் சுற்றமாய்
மண்டிடும் செல்வமாய் மாடாய் வீடாய்
இன்னும் பலவாய் எண்ணிலா உருவாய்
கோடி கோடியாய் குழுமிய மாயைகள்
ஓடிட இறைதாள் ஒன்றிட நாமே
தழையே காற்றே தண்ணீர் தானே
அவையே உண்டு அமர்ந்தனர் யோகில்
அண்டரும் வியக்கும் அளப்பருந் தவத்தொடு
மண்டலம் சென்றது மானிடர் தொடர்பாம்
தம்வினை முடிக்கத் தவம்தான் முடித்தனர்
பவஇருள் ஓட்டிடும் சிவச்சுடர் ஒளியே
அவ்வொளி தருவார் அவனுடை அடியார்
அவ்வடி யார்க்கு அடித்தொண் டாற்றின்
அத்தொண் டதுவே அவ்விறை தாளில்
ஆழ்த்த வீடது அமிழ்தினில் ஆழ்த்தும்

என்றே தெளிந்து என்றும் தொண்டரை
நன்றெனப் போற்றி நனித்தொண் டியற்றி
அருள்பெறு மாபினர் அண்ணு மலைவாழ்
பெருகுமுச் செல்வப் பெரியோர் ஆகலின்
இளந்திரு முனிஇவர் இயலிடந் தேடி
ஏத்தினர் போற்றினர் இன்பம் எய்தினர்
அன்னையின் அன்பும் அச்சேய் விளைவும்
அளவிடல் முடியா அஃதே போன்றன
முனிவரின் அருளும் மொய்த்தவர் பணிவும்
ஏழ்பிறப் படியோம் இன்றே உய்ந்தோம்
வாழ்வெமக் கருளிட வருவீர் ஈங்கெனக்
காமாட்சி மலர்கொளும் கமழ்பூங் காவில்
தாமாட்சி கொண்டு தவக்கோல் தாங்க
அமைத்தனர் அழகுறு ஆசிரமம் ஒன்றே
அன்பெனும் கழிமேல் அமைதியை வேய்ந்து
இன்பகந் தனிலே இருந்தருள் கின்றனர்
ஆண்டவன் படைப்பில் யாவரும் ஒன்றே
எம்மதத் தாரும் சம்மதம் இங்கே
அணைய வருவீர் அகிலத் தீரென
அழைத்தருள் கின்றது ஆசிரமம் இதுவே
பதினாற் கலையில் பதிவுறு மதிபோல்
பதினாறு வயதில் பாரோர் உய்ய
யோக விளக்கெனும் ஓர் நூல் அருளினர்
ஒருநூற் றெட்டு உபதே சங்களைச்
ஸ்ரீசிவா னந்தஞா னமிர்த மென்னும்
திருவுறுப் பெயரால் திரட்டி ஈந்தனர்
ஓமெனும் வண்டால் யோகத் தடத்தில்
தாந்தனிப் பூத்திடும் தத்துவ மலர்கள்
விரைவில் நூலாய் வீசிக் கமழ

வரும்நன் ஞானே வாழ்த்திப் போற்றுமின்
நிலையா வாழ்வை நிலையென நம்பி
அலைவுறு மக்காள் அறைகுவம் கேண்மோ !
எத்தனை கோடி எடுத்தீர் பிறவி
எத்தனை துயரில் எரிந்தீர் அந்தோ !
போதும் போதும் புன்புலால் வாழ்வு
நாதன் திருவடி நண்ணி இன்பினில்
இருந்திடும் ஞான்றே இல்லைஇத் துயரெலாம்
விழிமின் ! எழுமின் ! விரைந்து வம்மின் !
சிவானந் தரின்நற் சீரடி சேர
ஆழ்க நீர் இறைதாள் வீட்டில்
வாழ்க வாழ்கென வணங்கிப் பணிந்தே.

ஓம்

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆக்கியோர்,
சைவப்புலவர் ஸ்ரீ. கே. தாசரதி.

உ

பெருஞ் சொற்கொண்டல்

புரிசை. சு. முருகேசனார்

சாற்றுக்கவி

வெண்பா

சீரார் சிவானந்த யோகி திருவருணை
யூரார் தவச்சாலை யுற்றுயர்வோன்—பாரார்
படித்துய்ய நூற்றெட்டாய்ப் பன்னுமுப தேசம்
வடித்தளித்தான் பேரருளால் வந்து.

தவமேதன் செல்வமெனச் சார்பதினா றாண்டில்
நவமே சிவஞான ஞானம்—பவமே [னென்னே
துடைக்கவொரு நூலளித்த தோன்றலெனி
படைக்கவரி தித்திரு நூல் பார்த்து.

பார்த்துப் படித்துப் பழகி சிவஞான
மார்த்தும் படியருள்க வம்முனிவன்—சேர்த்திவரைத்
தானாக்கு மாவருணை தற்பரனா லன்பரொடு
நானா வளம் பெறுக நாடு.

நன்றியுரை

இந்நூலைச் சோதித்து நூன்முகம் அளித்தருளிய பெரியார் ஸ்ரீ நடனனந்த ஸ்வாமிகளுக்கும், சாற்றுக்கவி யளித்துச் சிறப்புறப்படுத்திய பெருஞ் சொற் கொண்டல், புரிசை, ஸ்ரீ. சு. முருகேசனர் அவர்கட்கும், முனிவரவர் களின் வரலாற்றுச் சுருக்கத்தைப் பாடிய சைவப்புலவர் ஸ்ரீ. கே. தாசரதிஅவர்கட்கும், இந்நூலை அழகுற அச்சிட் டளித்த ஜூப்பிட்டர் அச்சகத்தாருக்கும், அரிய முயற்சி யுடன் வெளியிட்ட சென்னை சிவானந்த நிலையத்தைச் சார்ந்தவரும், சென்னை கந்தகோட்டம் மாஜி தருமகர்த்தர் களாகிய திரு. பழவேற்காடு: சுப்பராய செட்டியார் அவர் கள், தௌத்திரரும் திரு. நேமம், செங்கல்வராய செட்டி யார் அவர்கள் குமாரருமாகிய நேமம், முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்களுக்கும் எங்கள் அன்புள்ள நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
ஆஸ்ரமவாசிகள்,
திருவண்ணமலை.

ஓம்

ஸ்ரீ சிவானந்த ஞானாமிர்தம்

காப்பு

அங்கும் இங்கும் அலைவ தெனாமல்
எங்கும் நிறைந்த இறையை நாடத்
துங்க மிகுஞா னாமிர் தம்சொல
மங்கள நாதன் மலரடி காப்பாம்

1. ஈசனை அடைய விரும்பும் பக்தர்கள் முதலில் தங்கள் ஹிருதயத்தைப் பரிசுத்தம் செய்யும் முயற்சியில் பரிபூரணமாயும் இடைவிடாமலும் ஈடுபடவேண்டும். கண்ணாடிபோன்ற பரிசுத்தமானதும் துல்லியமானதுமான பொருள்களிலன்றி ஆதித்தன் பிரதிபலனம் சித்திக்காதல்லவா! ஆண்டவன் அருளை நாடுவதென்பதும் இப்படித்தான். ஆண்டவனைத் தேடல், அடைதல் என்பதெல்லாம் ஆண்டவன் அருள் தன் ஹிருதயத்தில் பிரதிபலிக்கும்படி அவ்வளவு துல்லியமாக ஹிருதயத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்பதே. தவம், விரதம் முதலிய முயற்சிகளும் இதைக் குறித்தே ஆற்றப்படுவனவாம். ஹிருதயத்திலுள்ள அழுக்குகளும், வாசனைகளும் அகற்றப்பட்டால் ஈசனருள் இயற்கையாகவே அதில் பிரதிபலிக்கின்றது. நீ என்னிடத்தில் பிரகாசிக்க வேண்டும் அல்லது என்னை உன் திருவடிகளில் ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று நாம் ஆண்டவனைக் குறித்துப் பிரார்த்திப்பதன் பொருள், அவர் எழுந்தருளுவதற்குத் தகுதியானபடி தன் ஹிருதயமான ஆசனத்தைத் தயாரிக்க வேண்டு

மென்பதே. இந்த அஸ்திவாரமான உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் ஆயிரங்கோடி காலம் அருந்தவம் பண்ணினலும் கோரிய பலன் சித்திப்பதருமை.

2. உங்கள் காரியம் அனைத்தையும் ஈசனிடமே ஒப்படைத்துவிடுங்கள். ஏனென்றல், பிராரப்த வினையின் வயப்பட்ட உங்களுக்கு உங்கள் இஷ்டம்போல் உங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் சக்தியும் சுதந்தரமும் இல்லை. வினையின் அளவுக்கேற்ப ஆண்டவனல் அருளப்படும் சுகதுக்கங்களையே அனுபவிக்கக் கடமைப்பட்டவர்கள். வகுத்தான் வகுத்தபடிக்கே அனுபவம் என்ற உண்மை தெரிந்தபின் நம் செயலைப்பற்றிய கர்த்ருத்வ பாவம் நமக்கேன்? அதனல் துன்பமே யொழிய இன்பமேது? ஆதலால் உடலையே ஈசனிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு எந்த நிகழ்ச்சிக்கும் ஈசனையே பொறுப்பாக்கி நிம்மதியாயிருக்கப் பழகுவதே சர்வ பந்தங்களையும் ஒரேயடியாகத் தொலைத்து விடுதற்கான சரியான வழியாகும்.

3. செயல்களில் பற்றுதல் வேண்டாம். அந்தப் பற்றுதலே மேல் பிறவிகளுக்கான விதைகளா யிருப்பதால் எந்தக் காரியத்தையும் தனக்கென்றே பிறர்க்கென்றே செய்யாமல் பொதுவாகவும் உதாசீன பாவத்துடனும் செய்யப் பழகி வரல்வேண்டும். இதுவே நிஷ்காம கர்மயோகமென்று கூறப்படுகிறது.

4. உங்களின் அரிய காலத்தில் ஒரு விநாடியும் வீணக்காமல் பிறவிப்பயனை யடைய முயற்சியுங்கள். ஏனென்றல், மனிதப் பிறப்பின் ஒவ்வொரு விநாடியும் விலையற்றதென்று உணரவேண்டும்.

5. ஒவ்வொருவரும் தன்னை அறிவதே கடவுளை அறிவதாகும். இதற்குரிய ஒரேவழி மனதை ஈசனுக்குப் பலியாக்கி விடுவதே.

6. தன் மனதைப் பரிபூர்ணமாக ஆண்டவன் பக்கம் திருப்பிவிடும் புண்ணியவான்களைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் வேறில்லை.

7. தத்துவ விசாரணையை நூல்களில் ஆராய்வதைப் பார்க்கிலும் உள்ளத்தில் விசாரிப்பதே உண்மையான விசாரமாம்.

8. உபாசனா மூர்த்திகளாலும், ஜபம், தியானம், யோகம் முதலிய சாதனங்களாலும் படிப்படியாக ஆன்ம சாக்ஷாத்காரமடைய முயற்சிப்பதே நலம்.

9. எல்லா உயிர்களிலும் சம புத்தியும், சுக துக்கங்களில் விருப்பு வெறுப்பின்மையும் பக்குவப்பட்ட மனதிற்கு அடையாளங்கள்.

10. உடலாகிய க்ஷேத்திரத்திலுள்ள க்ஷேத்திரக்ஞனை அறிந்தவனே உண்மையில் கடவுளை அறிந்தவனும் மெய்ஞ்ஞானியுமாவான்.

11. யார் எல்லா ஜீவராசிகளிலும் அன்பு செலுத்துகிறார்களோ ஆண்டவன் அவரிடத்தில் அன்பு செலுத்துகிறார்.

12. உலகில் ஒருவன் தனக்குக் கீழ்ப்பட்டவர்களின் குற்றங்களைத் தயவோடு மன்னித்தால் அவர் குற்றங்களை ஆண்டவனும் தயவோடு மன்னிப்பாரென்பது சத்யம். ஆகையால் பிறர் குற்றங்களைப் பொருட் படுத்தாதே.

13. நீ எதை மறந்தாலும் ஆண்டவனை மறவாதே. ஆண்டவனை மறப்பதென்பது தன்னையே மறந்ததாகும். இதைத் தான் தற்கொலை எனப்படுவது.

14. உனது காரியங்கள் உன் மனச் சாட்சிக்கு விரோதமில்லாம லிருப்பதே முதன்மை. கூடுமானால் அக் காரியங்கள் இதரர்களுக்கும் சம்மதமாய் இருக்கச் செய்ய முயற்சிப்பது நலம்.

15. பிறர் குற்றங்களை நாடுவதினும் தன் குற்றந் தெரிந்து நீக்க முயற்சிப்பதே விவேகமாம்.

16. கவலையுள்ளவனும் கஷ்டப்பட்டவனுமே கடவுளை எளிதில் அடைகின்றான்.

17. உலகப் பொருள்கள்மேல் சிதறிக் கிடக்கும் மனதை ஒருமுகப்படுத்தி ஆண்டவன்பால் திருப்பினால் ஆண்டவனை அடைதல் மிக எளிதாகும்.

18. எவனுடைய ஹிருதயம் கடவுளை நாடித் தீவிரப் படுகின்றதோ அவனுடைய உள்ளத்திலுள்ள குற்றங் களும் தீவிரமாய்த் தொலைகின்றன.

19. நீ ஒருவனுக்குச் செய்யும் உதவி ஆண்டவனுக் குச் செய்ததேயாம். எல்லா உயிர்களும் ஆண்டவன் சொரூபமே யல்லவா!

20. நீ கடவுளிடம் செலுத்தும் அன்பின் அள விற்கே கடவுள் அருளும் உனக்குக் கிடைக்கின்றது.

21. நீ மற்றவர்களுக்கு உபதேசிப்பதைவிட உன் னுடைய குறைகளை நீக்கிக் கொள்ளுவதில் அடிக்கடி உனக்கு நீ உபதேசித்துக் கொள்வதே உத்தமம்.

22. உன் மனதிற்குச் செய்யும் ஒரு சிறு உபதேசத்தால் நீ அடையும் பிரத்தியக்ஷ பலனை நீ வெளியாருக்குச் செய்யும் கோடிக் கணக்கான உபதேசங்களாலும் அடைய முடியாது.

23. எல்லோருடைய க்ஷேமத்தையும் விரும்பு. மற்றவர் க்ஷேமமே உனது க்ஷேமத்திற்கு ஆதாரம்.

24. நிராசையே பூர்ண ஆசையாம். அநித்தியப் பொருளாகிய சிருஷ்டிப் பொருள்களைக் கோருவதிலும் நித்தியப் பொருளாகிய சிருஷ்டி கர்த்தாவைக் கோருதல் சிரேஷ்டமல்லவா ?

25. காண்பனவெல்லாம் கற்பனைகளே. அவற்றிலுள்ள திருஷ்டியை அவற்றிற்கு ஆதாரப் பொருளில் மாற்றப் பழகுவதே நல்லது.

26. அற்புதங்களில் ஆசை வையாதே. அது பந்தத்திற்கே இடமாகும். நீ பரதந்திரனுதலால் உன்னுலாவது ஒன்றுமில்லை. மாயாவிசிட்ட ஈஸ்வரனுக்கே அற்புதங்களை இயற்றுதல் சாத்யம்.

27. உலக மயக்கம் தெரியாதவன் வேதாந்தம் பேசுவது நகைப்புக் கிடனும். அவன் தன் வார்த்தைகளால் பிறரை ஏமாற்றுவதைவிட தன்னையே அதிகமாக ஏமாற்றிக் கொள்ளுகிருன்.

28. எப்பொழுதும் பிறருடைய வழியைப் பரீக்ஷிக்க முயற்சிப்பது சன்மார்க்கமல்ல. வழி பலவாக இருந்தாலும் முடிவு ஒன்றே. ஆதலால் அவரவர்க்குப் பிடித்த வழியில் அவரவர் செல்வதால் தவறு ஒன்றுமில்லை யென்ற உண்மையை உணர்வாயாக.

29. உன் வழியில் உறுதியாக நட; திடமாக நம்பு; பிறர் அதைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்பாதே.

30. உனது குருவைப் பரிபூர்ணமாக நம்பு. அவர் காட்டிய வழியில் அற்ப சந்தேகமும் வேண்டாம். அந்த சந்தேகமே, உன்னை நல்வழியில் நின்றும் திருப்பிவிடும் மாயை என்று தெரிந்துகொள்.

31. மகான்களிடத்தில் உனக்குத் தோன்றும் தோஷங்களைப் பொருட்படுத்தாதே. அவர்கள் இடத்தில் உள்ள குணங்களை மட்டும் கிரகித்துக்கொள். சிப்பியின் தோஷத்தைக் கவனித்தால் முத்து கிடைக்காதல்லவா ?

32. வேறு எந்தப் பிறவியாலும் தாண்ட முடியாத பிறவிக் கடலை மனிதப் பிறப்பு ஒன்றால்தான் தாண்ட முடியும். ஆகையால் உனக்குக் கிடைத்த இந்த மானிடத்தின் அருமையை உணர்ந்து பவக்கடலைக் கடக்கும் தெப்பமாக அதை உபயோகித்துப் பிறவிப் பிணியை ஒழிப்பாயாக.

33. அப்பியாச காலங்களில் தோன்றும் மயக்கங்களைக் கண்டு அஞ்சாதே. சோர்வடைந்து அப்பியாசத்தை விட்டுவிடாதே. பின்னர்க் கிடைக்கும் உயர்ந்த அனுபவத்தின் பிரகாசத்தால் இந்த மயக்கங்கள் என்னும் இருள் தலைகாட்டாது மறைந்தொழியும்.

34. எல்லா ஜீவராசிகளிலும் ஜீவ சொரூபமாக விளங்குபவர் எல்லாம் வல்ல இறைவனே. நீ அந்த பரம்பொருளைத் தவிர்த்து வேறாக இல்லாமையால் சர்வஜீவ ராசிகளின் சுக துக்கங்களையும் உனதாகவே பாவனை செய். இதனால் சமரச பாவமும் துக்க நிவர்த்தியும் உண்டாகும்.

35. உன்னைச் சகல ஜீவரிடத்திலும் சகல ஜீவர்களை உன்னிடத்திலும் பார்க்கப் பழகு. இதுவே அகண்ட ஞானத்திற்கு வழியாகும்.

36. ஆண் பெண் பேதத்தைப் போக்கு. சரீர திருஷ்டியால்தான் இந்தப் பேதம் தோன்றுகிறது. அந்த இரு சரீரங்களிலும் உள்ள ஆன்மாவை மட்டில் நோக்கினால் பேதத்திற்கு இடமில்லை. இதற்கு ஆரம்பத்தில் எல்லா ஸ்திரிகளையும் தாயாகவும் ஈஸ்வரியாகவும் பாவனை செய்து வருவது நல்லது.

37. பிறவிப் பிணியை உடனே ஒழிக்கவல்லது ஆன்ம சாட்சாத்காரம். இதற்கு நேர் சாதனம் ஞானம். கர்மம், பக்தி, யோகம் முதலியவை ஞானத்திற்குச் சாதனமாகக் கொள்ளலாம்.

38. குருவின்றி ஞானம் கிடைக்காது. உனது குருவைத் தெய்வமாகப் பாவித்து பக்தி சிரத்தையுடன் வந்தனை வழிபாடுகள் செய். குருவினிடத்தில் உனக்கு ஏற்படும் நம்பிக்கைக்கும் பக்திக்கும் ஏற்ற அளவு அவருடைய அனுக்கிரகத்துக்குப் பாத்திரனுவாய். அதிதீவிர பக்தனுக்குக் குருவைவிட மாதா, பிதா, தெய்வங்களில்லை. தனது உயிராகவே அவன் அவரைப் பாவிக்கிறான். தனது உடல், பொருள், ஆவிகளையும் பரிபூர்ணமாக அவரிடம் சமர்ப்பணம் செய்து விடுகிறான். இத்தகைய பக்குவம் பெற்றவனுக்கு ஞானத்தைப்பற்றியோ, மோக்ஷத்தைப் பற்றியோ கவலையில்லை. அவனைப்பற்றிய கவலைகளெல்லாம் குருவே மேற்கொள்ளுகிறார்.

39. ஈசனும் குருவும் ஒன்றே. இருவர் இடத்திலும் தேகாபிமானமோ அதைப்பற்றி வரும் மற்ற தோஷங்

களும் கிடையா. தன்னை அநுபவ பூர்வமாக உணர்ந்த தத்வ ஞானி பாமரனைப்போல் தேகத்தோடு விளங்கினாலும் உண்மையில் அவன் ஈஸ்வரனாகவே அறிவால் விளங்குகிறான். அப்படிப்பட்டவனை ஆயிரம்பேர் குருவாக வழிபட்டாலும் அவனுக்குக் குரு சிஷ்யபாவம் இராது.

40. எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் எனது என்கின்ற பற்றை மட்டில் நீக்கிவிட்டால் அந்தக் கர்மத்தால் எவ்வித பந்தமும் உன்னைத் தொடராது. இத்தகைய மன நிலையுடையார் கர்மங்கள் செய்தும் செய்யாதவரே ஆவர்.

41. பல பொருள்கள் அல்லது லக்ஷியங்களைப்பற்றி பலஹீனப்பட்டிருக்கும் மனதை அவற்றின் நின்றும் திருப்பி ஒருமுகப்படுத்திச் சற்குரு அனுக்கிரகித்த ஒரே லக்ஷியத்தில் செலுத்தினால் அதுவே உத்தமமான த்யான மாகும். இதன் முதிர்ச்சியே சமாதி எனப்படுகிறது.

42. எதை அடைந்தால் எல்லாவற்றையும் அடைந்த தாகுமோ அப்படிப்பட்ட பிரம சொரூபத்தை அநுபவ பூர்வமாய் அடைந்த புண்ணிய புருடர்க்குப் பின்னர் இவ்வுலகிலோ, எவ்வுலகிலோ அடையத் தகுந்த வஸ்து வேறில்லை. அவனே நிரங்குச திருப்தியுடையவன். அவனுக்கு அதற்கு மேல் எத்தகைய விருப்பமும் ஏற்படுவதில்லை.

43. ஜீவர்களில் பல கோடிக் கொருவரே முடிவான உண்மை ஞானத்தை அடைகின்றனர். ஏனெனில், பல கோடி ஜன்மங்களில் விடாது முறையுடன் செய்து வந்த தவபரிபாகத்தால்தான் முடிவான ஜன்மத்தில் பரிபூர்ண ஞானத்தை அடைய முடியும்.

44. ஒரு ஞானி தனது சுபானுபவ மெய்ஞ்ஞானப் பிரகாசத்தால் கோடிக்கணக்கான ஜீவர்களை அஞ்ஞான இருளினின்றும் விடுவிக்கின்றான். அவனது முயற்சியும் சங்கற்பமும் இன்றியே சன்னதி விசேஷ மாத்திரத்தாலேயே, அல்லது அருட் பார்வை மாத்திரத்தாலேயே இந்த அனுக்கிரகம் நடக்கிறது.

45. ஒரு உத்தம அதிகாரிக்கு அவனது மனதே சன்மார்க்க வழி காட்டும் குருவாகவும், பாமரனுக்குத் துன் மார்க்கப் படுகுழியில் தள்ளும் மாயையாகவும் அமைகிறது. ஆகையால் மனதை எப்பொழுதும் சத்துவ குணத்தில் இருந்து நழுவாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

46. சாஸ்திர ஞானம், வாசா ஞானம், அனுபவ ஞானம் என்று இக்காலத்தில் ஞானம் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. புத்தக ஞானிகளின் அலங்கார வார்த்தைகளைக் கோடிகோடியாகக் கேட்பதிலும் அனுபவ ஞானிகளிடமிருந்து ஒரு வார்த்தைக் கேட்டாலும் அதுவே உனது பிறவிப் பிணியை ஒழித்தற்குப் போது மான மருந்தாகும்.

47. விக்கிரஹ ஆராதனை, மூர்த்தி வழிபாடு முத லிய சன்மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் அந்தந்த உருவத்தை யும் சாக்ஷாத் தெய்வமாகவே பூர்ண நம்பிக்கையுடன் பாவித்தால் அதுவே அவருடைய ஜன்மம் ஈடேறுவதற் குப் போதுமான சரியான உபாயமாம்.

48. அகந்தையே சகல பந்தங்களுக்கும் மூலம் அசத்தான உலகைச் சத்தாகக் காட்டுவதும், சடப் பொருள்களைச் சித்துப் பொருளாகத் தோற்றுவிப்பதும்

துக்க நிலையைச் சுக நிலையாக நம்பச் செய்வதும் இந்த அகந்தையின் வேலையே ; மாயா சொரூபம் அகந்தையே. ஆகவே ஜீவர்களிர் சர்வ துக்கங்களுக்கும் மூலமான இவ்வகந்தையின் சொரூபத்தையும் இருப்பையும் தெரிந்து அதை நிவர்த்தித்து விட்டால் அன்றே மனிதன் அமரத் தன்மை அடைந்து விடுகிறான். இதற்குக் குரு அனுக்கிரஹமும் துணை செய்ய வேண்டும்.

49. தேகாத்ம புத்தியே அஞ்ஞானம் எனப்படுகிறது. இந்த அஞ்ஞான நீக்கத்தாலன்றி ஞானம் சித்திப்பதில்லை. இதற்குச் சுருதிகளில் எண்ணிறந்த மார்க்கங்கள் கூறப்பட்டிருந்தாலும் ஹிருதய லக்ஷியத்துடன் செய்யப்படும் ஆன்ம விசாரமே நேரான சுலபமான வழியாகும். பிரத்தியக்ஷ அநுபவ ஞானத்தை உடனே அளிக்கவல்லது இவ்வாத்ம விசாரமேயாம்.

50. பொருளால் அருளை அடைய முடியாது. பணத்தால் ஞானத்தையும் மோக்ஷத்தையும் விலைக்கு வாங்கி விடுவோமென நம்புவது வீணே. ஆனால் சாஸ்திரோக்தமான தர்ம காரியங்கள் வியர்த்தமல்ல. அவை மனதில் உள்ள அழுக்கை அகற்றி ஞானத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஒருவனை அதிகாரியாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

51. மனமற்ற நிலையே மோக்ஷமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த மனதின் நிவர்த்தி இரண்டுவகைப்படும். ஒன்று மனோலயம், மற்றொன்று மனோநாசம். த்யான முதலியவற்றால் ஆரம்பத்தில் அடிக்கடி மனோலயம் ஏற்படும். அப்படி லயப்பட்டிருந்த வரையில் சாதகனுக்குப் பரிபூர்ண சித்தோப சாந்தி ஏற்படுவதால் சிலர் அந்நிலையையே மனமற்ற மோக்ஷ நிலை என்று நம்பி ஏமாறு

கிறார்கள். லயித்தமனது மீண்டும் எழும். அப்படி எழுந்தால் மீண்டும் அது சாதகனைப் பிரபஞ்ச வாசனையில் தள்ளும். ஆகையால் மனோ நாசமே சரியான மார்க்கமாகும். இந்த நாசம் எண்ணங்களின் மூலத்தை விசாரிப்பதாலும் எழும் ஒவ்வொரு எண்ணத்தையும் மூலத்திலேயே ஒடுக்கி வருவதாலும்தான் ஏற்படுகிறது. இதற்குத்தான் ஆத்ம விசாரம் என்று பெயர்.

52. சமாதி ஆனந்தமே இணையற்றது. மற்ற ஆனந்தங்களை அனுபவித்தற்கு மனம் வேண்டும். மனதால் அநுபவிக்கப்படும் ஆனந்தம் நித்தியமாய் இருக்க முடியாது. சமாதியானந்தமோ, மனம் நசித்த இடத்தில் விளங்கக் கூடிய தாகையால் அது இயற்கையானது நித்யமானது.

53. சிலர் ஹடயோகத்தின் மூலம் சித்தி பெற முயற்சிக்கிறார்கள். சிலர் பெற்றும் இருக்கிறார்கள். சித்தியின் பயனெல்லாம் ஜகமயக்கமேயன்றி வேறில்லை. பிறவிப் பெருங் கட்டில் நின்றும் விடுதலை பெற வேண்டும். ஒரு விவேகி இத்தகைய தவறுள்ள வழிகளில் புத்தியை சிறிதும் செலுத்தக்கூடாது. சித்திநெறி பொதுவாக ஞானத்திற்குச் சத்துருவான தேகாத்ம புத்தியைப் பலப்படுத்துவதாகவே முடிவதால், புத்திமான்கள் அதில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

54. ஞானமில்லாமல் அஞ்ஞானமில்லை. ஞானம் எல்லோருக்கும் இயற்கையாகவே கடவுளால் அருளப்பட்டிருக்கிறது. அந்த ஞானம் காரியமான உலகை நாடுகிற போது அது அஞ்ஞானம் என்றும், அதுவே காரணமான பிரமத்தை நாடுகிறபோது மெய்ஞ்ஞான மென்றும் கூறப்படுவதால் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள ஞானத்தி

னுள்ள தோஷத்தை நீக்க முயற்சிப்பதே மெய்ஞ்ஞானத்தை அடைய முயற்சிப்பதாகும்.

55. மோனத்தைப் பற்றிச் சாஸ்திரங்களும் பெரியோர்களும் பலபடக் கூறுகின்றனர். மொத்தத்தில் அதை நான்கு வகையாகக் கூறுகின்றனர். அதில் வாக்கு மௌனமும் ஒன்று. நினைவற்ற நனவு நிலையே (அதாவது) சாக்ர சுழுப்தி நிலையே உண்மையான மௌனமாகும். இதை அடைய முயற்சிக்காமல் கற்ப கோடிகாலம் வாக்கு மௌன விரதத்தைக் கைக்கொள்வதால் யாதொரு பயனும் கிடைக்காது. சிலர் வாக்கு மௌனத்தால் வார்த்தை விரயமில்லாமல் இருக்கலாம் என்பார்கள். நினைவற்றாலே வாக்கு தானுகவே அடங்கிவிடும். மனம் இறக்காமல் வாக்கு மௌனம் கொள்வதைவிட மித வார்த்தை எத்தனையோ மடங்கு உயர்வாகும்.

56. பிராணுயாமம் ஞான சாதனங்களில் ஒன்ருக யோக நூல்களில் பிரசித்தமாகக் கூறப்பட்டுள்ளது. இது அந்தரங்கம் என்றும் பஹிரங்கம் என்றும் இரு வகைப் படும். பஹிரங்கமானது ரேசக, பூரக, கும்பகங்களால் மாத்திரைக் கணக்கின்படி சிரமத்துடன் உஸ்வாச நிஸ்வாசங்களைத் தடைப்படுத்த முயற்சிப்பதாகும். வாயுவடங்கினுல் மனமும் அடங்கும் என்ற கருத்தில் இது தொடங்கப்படுகிறது. அந்தரங்கமாவது ரேசக, பூரக, கும்பகங்கள் இன்றியே பிராணனை நிரோதப் படுத்துவது. இதற்கு பிராணேபாசனை என்றும், கேவல கும்பகம் என்றும் பெயர்களாம். இதனுல் மனோ நிக்ரஹமும் ஆத்ம சித்தியும் எளிதில் கைகூடும். இதற்குப் பிராணனைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் போதும். பஹிரங்கப் பிராணுயாமம் அடயோக இனத்தில் ஒன்ருகும் வைராக்கியத்துடன்

அதைச் சாதித்தால் முடிவில் சித்திக்கும் அது காரணமாகிறது. ஆனால் பெரியோர்கள் ஆன்ம சித்தியிலேயே கருத்து உடையவராக இருப்பர்.

57. பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என வினைகள் மூன்றில் ஞானி பின் இரண்டையும் ஜயிக்கலாம், பிராரப்த வினை மட்டில் சரீரம் உள்ள மட்டில் ஞானியையும் விடாது. ஆனால் இந்தப் பிராரப்த வினையைவிட, மற்ற அஞ்ஞானிகளைத் தொடரும், வேறு எந்தக் கஷ்டங்களும் ஞானியைத் தொடராது.

58. மனதை அடக்க வேண்டும் என்ற அவாவாலும், வைராக்கியத்தாலும் முரட்டு வழிகளைப் பின் பற்றக்கூடாது. அப்படிச் செய்தால் மீண்டும் மீண்டும் மனமும் அதிவேகத்துடன் தலைகாட்டிக் கொண்டேயிருக்கும். அமைதியான சன்மார்க்க வழியில் நாளாவட்டத்தில் மனதிலுள்ள ரஜோ, தமோ குணங்களைப் போக்க வேண்டும். ரஜோ குண, தமோ குண நாசமே மனோநாசமெனப்படும்.

59. சாதனையின் முதிர்ச்சியால் ஒருவனுக்கு நிருவிகற்ப சமாதி கைகூடுவதற்கு சில தினங்களுக்குமுன் மனமானது கட்டுக் கடங்காத காளைபோல் பேயாட்டமாடி சாதகனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்துத் திடீரென முழுதும் ஒடுங்கிவிடும். இந்நிலை சுமார் 7 தினங்கள் வரையிருக்கும். காய சுத்தியிருந்தால் அதற்கு மேலும் உடல் நழுவும்வரையில் கூடவிருக்கும். இந்நிலையில் தக்க பாதுகாப்பு இல்லாவிட்டால் மஹா சமாதி அடைந்து விட்டதாக நினைத்துப் பாமரர்கள் அவ்வுடலைச் சமாதி செய்ய நேரிடும்.

60. அவதார புருடனுக்கும் ஞானிக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. அதர்மங்களை அழித்து குறிப்பிட்ட சில தர்ம மார்க்கங்களைச் சுருதி, யுக்தி அனுபவத்திற்கேற்ற படி நிலைநாட்டி உலகினரை ஆஸ்தீக வழிக்குத் திருப்பி விடுவதோடு அவதார புருஷன் வேலை முடிந்துவிடுகிறது. இது ஞானத்திற்கு வழி கோலுவதாகும். ஆனால் ஞானியோ சுருதி, யுக்தி, அனுபவங்களுக் கெட்டாத அதீத நிலையை யடைந்து சாக்ஷாத் பரம்பொருளாகவே விளங்கித் தன்னை அடைந்தோரையும் அந்நிலையில் சேர்த்து அவர்களது பிறவிப்பிணியை அப்பொழுதே தொலைத்து விடுகிறான்.

61. காமியத்தவம், நிஷ்காமியத்தவமெனத் தவம் இரண்டு வகைப்படும். காமியத் தவத்தால் அஷ்டமா சித்திகள் அடையலாம். ஆனால் அத்துடன் திருப்தி அடைந்து விடாமல் காமியத் தவத்தால் கிடைத்த மன ஏகாக்கிரத் தன்மையைக் கொண்டு நிஷ்காமியத் தவத்தைத் தொடங்கினால் பேரின்பம் பெறலாம். அழியாத ஜீவன் முக்தி பதமும் பெறலாம்.

62. சச்சிதானந்த சொரூப ஆத்மாவே சத்து. இதை நாமரூப மயமான உலகப் பொருளிலிருந்து அடைய முடியாது. இந்த நாமரூபப் பிரபஞ்சங்களைத் தாண்டினால்தான் அதை அறியவும் அடையவும் கூடும்.

63. சிலர் மனதை அடக்கப் பிராணயாமம் முதலிய சாதனைகளைக் கைக் கொள்கின்றனர். இது பலன் கொடுக்க அதிக காலம் செல்லும். மிகுந்த சிரமமும் உண்டு. ஆத்ம விசாரம்தான் நேர்சாதனம். இதனால் உடனே பலன்

கிடைக்கிறது. இச்சாதனம் எளிதாகவும் இயல்பாகவும் தோன்றும்.

64. ஊனக் கண்களை மூடிக் கிடப்பதே சமாதி ஆகாது. அச்சமயம் அகக்கண் விழிப்புற வேண்டும். அவ்விழிப்பில் தோன்றும் பல அரிய தோற்றங்கள் மறைந்து முடிவில் அகவிழியும் மூடிய நிலையே விழிப்பில் விழிப்பென்றும் ஒளியில் ஒளியென்றும் தூங்காமல் தூங்கும் சுக நிலையென்றும் சொல்லப்படும்.

65. சமாதியினின்றும் தெளிந்து மேல் நிலைக்கு வரும்போது ஏக திருஷ்டியுடையவனாக தானென்னும் ஒரே நிலையை மட்டும் உள்ளவனாகிறான். இதற்குமேல் தான் நிருவிகற்பத்தை அடையமுடியும். இதைப் பெற்றவனே அழிவற்ற நித்யாத்மாவாகவும் துரியாதீதமான பரிபூர்ண பிரஹ்ம சாட்சாத்காரமுடையவனாகவும் விளங்குவான்.

66. ஒருவனுக்கு அறியாமை யென்னும் ஜீவத்துவம் நசித்தவுடனேயே அவன் ஜீவன் முத்தனாகி விடுகிறான். ஆனால் அவனது உடல் உடனே நசித்து விடுவதில்லை. பிராரப்த போகம் தீருமட்டும் அது இருந்தே தீரும். அப்படிப்பட்ட உடலோடு கூடிய முத்தி நிலைக்கே ஜீவன் முத்தியென்று பெயர். வினை முடிந்து உடல் விழுந்த பிறகு அதே முத்தி நிலைக்கே விதேக முத்தியென்று பெயர். ஜீவன் முத்தி விதேக முத்தி நிலைகளுக்குள்ள பேதம் இவ்வளவே.

67. கடவுளை நம்பு. அவரே அகில உலகையும் படைத்துக் காப்பவர். உனது உடல் பாரத்தையும்

குடும்ப பாரத்தையும் அவரிடமே பூராவும் ஒப்படைத்து விட்டாயேயானால் பிறகு எவ்வித துன்பமும் உன்னைத் தொடராது.

68. வீட்டிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும், குடும்பியாயிருந்தாலும், சந்நியாசியாயிருந்தாலும், நான் எனது என்ற இரண்டையும் நீக்கும் அளவும் பந்த நிவர்த்தி இல்லை.

69. நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களே சம்சாரம், மாயை. அவை மனதிலுள்ளன. மனதினின்றும் அவற்றைத் துறப்பதே துறவின் உண்மையாகும்.

70. நான் சந்நியாசி என்னும் பாவனையுடைய ஓர் சந்நியாசியைக் காட்டிலும், நான் சம்சாரி யென்னும் பாவனை இல்லாத ஓர் சம்சாரி கோடி பங்கு உயர்ந்தவனாவான்.

71. இந்திரியங்களின் வழி செல்லாதே. அவைகளே உன்னைச் சன்மார்க்கத்திற்குச் செல்லவொட்டாமல் தடுக்கும் சத்துருக்கள். எப்போதும் அவைகளை உன் வசத்தில் அடக்கி வைத்திரு.

72. தேகம் தோன்றும்போது ஆன்மா தோன்றுது. ஆன்மா தோன்றும்போது தேகம் தோன்றுது. தேகாத்ம புத்தி நீங்கினால் உன் சுயரூபமான ஆத்ம ஜோதி பிரகாசிக்கும்.

73. அதிக வார்த்தை, அமித ஊண், மிகுந்த உழைப்பு இவை நித்திரைக்குக் காரணம். களைப்பாலும், நித்திரையாலும், தவத்திற்குத் தடைபடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

74. அதிகமான சாஸ்திரப்படிப்பாலும் ஞானம் வந்துவிடாது. அதிகப் படிப்பால் அதிக வாசனைகள்தான் வரும். வித்யா கர்வமும் உண்டாகும். இவற்றைத் துலைப்பது எளிதல்ல. குரு மொழி ஒன்றே ஞான மடைதற்குப் போதுமானது.

75. குருவைப் பரிபூர்ணமாக நம்பு. வெளித்தோற்றத்தில் அவரிடம் காணப்படும் குறைபாடுகளைக் கண்டு அவரிடம் சந்தேகங்கொள்ளாதே. அவர் எவ்வளவு அனுசாரமுடையவராகக் காணப்பட்டாலும் அவரிடம் நீ வைக்கும் பரிபூர்ண விஸ்வாசமே உன்னை நிச்சயமாய் கதி சேர்ப்பது என்பதில் ஐயமில்லை.

76. வெளியிலோ, உள்ளிலோ காணப்படும் பொருள்கள் யாவும் பிரபஞ்சங்களே. அவற்றிலுள்ள கருத்தை, காணும் பொருளில் செலுத்தவேண்டும். அதற்குத்தான் திருக்கு திருஷ்டி என்றும் ஞான திருஷ்டி என்றும் பெயர்.

77. சங்கற்பம் தோன்றிக்கொண்டு இருக்கும் வரையில் சாதனையை விடக்கூடாது. பிரயத்தனம் இல்லாமலே சாக்ர சுழுப்தி ஏற்பட்டால் அதற்கு மேல் எந்த சாதனங்களும் தேவையில்லை.

78. சுகமோ, துக்கமோ, லாபமோ, நஷ்டமோ, நன்மையோ, தீமையோ எல்லாம் கடவுள் செயலென்று தீர்மானித்து மனதை நிர்ச்சலனமாக வைத்திருக்கப் பழகு.

79. சரியையோ, கிரியையோ, யோகமோ, ஞானமோ எல்லாம் ஒன்றுதான். எல்லாவற்றிலும் மன பரிசுத்தமே முக்யம், மனக் குற்றம் தீராத வரையில் எந்த

உயர்ந்த சாதனங்களாலும் ஆத்ம சாட்சாத்காரம் பெற்று விட முடியாது.

80. எல்லா ஜீவர்களிலும் ஈசனையே பார். தேக பேதத்தை நாடாதே. எறும்பு முதல் யானைவரையிலுள்ள எல்லா ஜீவர்களின் சரீரங்களிலும் ஈசனே உயிர் வடிவாய் இருப்பதால் சமனோக்குடன் உயிர்களிடத்தில் அன்பாயிரு.

81. அவரவர் குற்றத்திற்கு ஏற்ற பலனை அவரவரே அடைய வேண்டி யிருப்பதால் பிறர் குற்றங்களைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். அவைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு கடவுளைச் சார்ந்ததாகும்.

82. ஆசையற்ற இடமே அருள் பிரகாசிக்குமிடம். ஆகையால் மனதிலுள்ள எல்லா இச்சைகளையும் ஒவ்வொன்றுயப் பரிசீலனை செய்து விலக்கி விடு. வருவது வந்தே தீரும். நாம் விருப்பு வெறுப்பு கொள்வதால் யாதொரு பயனுமில்லை.

83. சலனமே பந்தம்; நிர்ச்சலனமே முக்தி.

84. மனம் போன போக்கெல்லாம் போகாதிருக்கப் பழகுதலே உயர்ந்த ஞான சாதனமாகும்.

85. நாக்கு ருசிக்கு அடிமைப்படாதே. ஆண்டவன் கட்டளைப்படி கிடைத்ததைக் கொண்டு பசியைப் போக்கு. சீதோஷ்ணங்களையும் பொறுத்துக்கொள்.

86. நான் இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன் என்ற எண்ண மில்லாமல் செய்யுங் காரியங்கள் கெட்டவையா யிருந்தாலும் அவற்றால் ஞானிக்கு ஒன்றும்

பாவமில்லை. ஆனால் அவ்வித பாவனையுடன் செய்யுங் காரியம் புண்ணியமானதா யிருந்தாலும் அதனால் பந்தமுண்டு.

87. அடக்கமே உயர்வுக்கு வழி. உன்னிடத்திலுள்ள சக்திகளை பிறர் அறிய வேண்டுமென விரும்பாதே. அத்தகைய விருப்பமே முடிவில் உன்னை ஓர் பெரிய சம்சாரியாக்கிவிடும்.

88. பிறர் உன்னிடத்தில் காணும் சித்திகளை ஈசன் செயலென்று உணர். அவரே உன் உடலைக் கருவியாகக் கொண்டு சித்திகளைத் தோற்றுவிக்கிறார். அவற்றை உன்னுடையவையாகக் கருதினால் அதனால் உனக்குஅனர்த்தமே உண்டாகும்.

89. புகழ்ச்சியில் ஆசை வையாதே. புகழ்ச்சியைப் போன்ற சத்துரு வேறில்லை. புகழ்ச்சி இகழ்ச்சிகள் தேக திருஷ்டியில் உள்ளனவே யொழிய ஆத்ம திருஷ்டியில் இல்லை.

90. யாருடைய தயவையும் நாடாதே. யாராலும் உனக்கு ஆகவேண்டியது யாதொன்றுமில்லை. ஈஸ்வரனை நம்பிய உனது க்ஷேம லாபங்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு ஈஸ்வரனையே சேர்ந்ததாகும். யாரிடத்திலும் விருப்போ வெறுப்போ கொள்ள வேண்டாம். பிறரது நிந்தாஸ் துதிகளையும் பொருட்படுத்த வேண்டாம்.

91. தேகத்திலுள்ள நான், என்னும் புத்தி நீங்கும் வரையில் ஆத்மா நான் என்னும் பாவம் வேண்டும். தேகாத்ம புத்தி முற்றும் நீங்கிவிட்ட பிறகு சிவோகம் பாவனைக்கு அவசியமில்லை. ஆனால் எப்பொழுதும் ஆன்ம சுபாவமாகவே பிரகாசிக்க வேண்டும்.

92. அனுபவ ஞானம் கிடைப்பது மிக அருமை. அப்படிக் கிடைத்த ஞானத்தை நழுவாமல் திடப்படுத்திக் கொள்ள வேண்டியது மிக்க அவசியம். துற்சங்கத்தாலும், பல ஜன்ம பழக்க வாசனைகளாலும், காற்றில் ஏற்றிய தீபம் போல் கிடைத்த ஞானுனுபவம் நழுவுவதும் உண்டு. கடைசி வரையில் எச்சரிக்கையா யிருப்பதே நல்லது.

93. மத வாதங்களில் தலையிடாதே. எல்லா மதங் களும் ஒரே பிர்மத்தை அடைதற்கான பல்வேறு மார்க் கங்கள்தான். எந்த மதத்தைத் தழுவினுலும் முடிவை அடையலாம். வழி வித்தியாசங்களில் சண்டையிட்டுக் கொள்வது அறியாமையாகும். எந்த வழியிலும் உறுதி யான பற்றுதல்தான் முக்கியம்.

94. சிலர் சாஸ்திர மூலம் மஹா வாக்கிய விசாரணை செய்து அஹம் பிர்மம், என்று நிச்சயத்தோடு திருப்தி அடைந்து விடுகிறுர்கள். இதனுல் பந்த நிவர்த்தி ஏற் படாது. மருந்தின் பெயரைச் சொல்வதால் வியாதி போய்விடாது. நெருப்பென்று வாயால் சொல்வதால் சுட்டுவிடாது. இது வரையில் தேகத்தில் அபேதமாய் ஐக்யப்பட்டிருந்த மனம் அதைப்போல் ஆத்மாவில் இரண் டற ஐக்யமாக வேண்டும். இதற்கு நெடுங்கால சாதனம் வேண்டும்.

95. சிலர் அபரோக்ஷ ஞானம் பெற்ற பின்னரும், ஜபம், த்யானம், முதலிய சாதனங்களைச் செய்வதுண்டு. இதற்குக் காரணம் மனதில் உள்ள வாசனைகள் நீங்கும் பொருட்டும், ஏகாக்கிர தன்மை வாய்க்கும் பொருட்டும் தான். இதனுல் அபரோக்ஷ ஞானத்திற்குப் பலமே யொழிய குறையொன்றுமில்லை.

96. சன்மார்க்கத்தின் இரு பெரும் பிரிவுகளான வேதாந்த, சித்தாந்தங்களைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம். பரமாத்மா தரிசனத்தில் நான், என்னும் தனி முதல் ஒன்றும் கிடையாது. உள்ளது பரமாத்மாவே. அதற்கு அன்னியம் அணுவு மில்லை யென்பது வேதாந்தம். எனது, என்று எனக்கொரு சுதந்திரமும் கிடையாது. எல்லாம் பரமாத்மாவுடையதே. அவர் முன்னிலையில் நான் தற் செயலற்ற ஒரு கருவி மாத்திரமே என்பது சித்தாந்தம். நான் இல்லை என்பதும் எனது இல்லை என்பதும் இரண்டும் ஒன்றுதான். இவ் விரண்டில் ஒன்று தொலைந்தாலே மற்றதுவும் தானாகவே தொலையும். இதில் விவாதத்திற்கு இடமேது ?

97. சிலர் முத்தியாலும் பேதங் கற்பித்துக் குழப்பம் அடைகின்றனர். அகங்கார மமகாரங்களே பந்தமென்று தெரிந்த பின் முதலில் அவ்விரண்டையும் ஒழிக்க முயற்சிப்பதே புத்திமான்களுக் கழகு. அவ்விரண்டையும் தாண்டிய பிறகன்றோ முத்தியைப்பற்றிச் சிந்திக்கவும் பேசவும் உரிமை ஏற்படும். அகம்பாவ அழிவோடே சகல வாதங்களும் அழிந்து விடுகின்றன.

98. சிலர் சந்நியாசம் பெற்றால்தான் ஞானம் பெறக் கூடுமென்று தவறாக நினைக்கிறார்கள். ஞானமடைதற்கான நான்குவித ஆச்ரமங்களுள் சந்நியாசமும் ஒன்று. சன்னியாசத்தல் அடையும் ஞானத்தை மற்ற மூன்று ஆச்ரமங்களிலிருந்தும் அடையலாம். வேண்டிய தெல்லாம் அந்தந்த ஆச்ரம ஒழுக்கத்தினின்றும் பிறழாமலிருக்க வேண்டியதே முக்கியம்.

99. ஞானியின் வெளி விவகாரத்தில் எவ்வித நியமமும் இல்லை. பிராரப்த வினைக்கீடாக அவ்விவகாரங்கள் நடக்கின்

றன. பிராரப்தமோ பலவகைப்பட்டவை. விவகாரங்களும் பலவகைப்பட்டிருக்கலாம். ஆனால், அவ்விவகாரங்களில் ஞானிக்கு கருத்ருத்வ, போக்த்ருத்வ, பாவமில்லாமையே ஞானத்திற்கு அடையாளம். ஆகையால் வெளி விவகாரங்களைக் கொண்டு யாரையும் பரீக்ஷிக்க முயலாதே.

100. உபநிஷத்துக்களில் சத்யமான புருஷனின் ஸ்தானமாகச் சொல்லியிருக்கும் ஹிருதயகுகை என்பது சரீரத்தின் கண்ணுள்ள புத்தி விருத்தியேயாம். பிர்ஹம சைதன்யமானது புத்தி விருத்தியின் அபின்னமாகக் கலந்திருக்கிறது போலத் தோன்றுகிறது. புருஷன் எதில் பிரதிபிம்பிக்கிறனே அந்த அந்தக் கரணமானது விஷயங்களைப் பற்றாமல் அழிந்தாற்போல இருக்கிற நிலைமையில் புருஷன் எந்த வஸ்துவினுடைய அபேக்ஷையுமின்றி ஸ்வதந்திரனாகின்றான். ஆனந்தஸ்வரூபியாகின்றான். அது தனது ஸ்வாப நிலை யென்றும் கைவல்ய ஸ்திதி யென்றும் சொல்லப்படுவதாகும்.

101. கைவல்யத்தை நோக்கிச் சமாதி கொள்ளுங் காலம் நீங்கலாக இடையிலுள்ள மற்றக் காலங்களில் பூர்வ வாசனைகளினின்று வேறு விருத்திகள் உண்டாகும். அதாவது ஒரே விருத்தியானது ஒன்றன் பின் ஒன்றாக தைல தாரைபோன்று நிகழும்போது ஒரு விருத்திக்கும், மற்றொரு விருத்திக்கும் உள்ள இடைவெளிகளில் பூர்வ வாசனையால் அந்நிய விருத்திகள் உண்டாகும். அந்த அன்னிய விருத்திகள் யோகியின் பிரக்ஞைக்கு வந்தாலும் அவை யோகியைப் பாதிக்காவாம். ஏனென்றால் நாளடைவில் அபிவிருத்திகளில் வீரியமும் வேகமும் குறைந்து வருவதால் அவை வறுத்த விதைக்குச் சமானமாகின்றன.

102. சித்தம் ஐந்து நிலைமைகளை யுடையது. (1) சஞ்சல நிலைமை (2) ஒன்றையும் அறியாத நிலைமை (3) கொஞ்ச காலம் சஞ்சலமில்லாமலும் அதிக காலம் சஞ்சலத்தோடும் உள்ள நிலைமை (4) ஒரே லக்ஷியத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் நிலைமை (5) விருத்திகள் சூன்யமாகவும், ஆனால் விருத்திகளின் பீஜமான வாசனைகளோடும் உள்ள நிலைமை. இவற்றில் முதல் 3 நிலைமைகளில் யோகாப்பியாசம் கைகூடாது. 4, 5 நிலைமைகளில் சாதனை சித்திக்கும்.

103. விருத்திகள் அடங்கும்போது விஷயங்கள் ஒன்றும் இல்லை. அப்பொழுது புருஷன் கேவலம் தனது சுபாவ நிலையிலேயே இருக்கிறான். விருத்திகள் நிகழும் போது அதே புருஷன் விருத்திகளுடன் சம்பந்தப்பட்டு விருத்தி ரூபத்தை அடைகிறான்.

104. அப்பியாசம், வைராக்கியம், என்ற உபாயங்களால் விருத்திகளின் நிரோதம் உண்டாகின்றது. சத்வம் மேலிடும்போது விருத்தியானது உள்முகப்பட்டுக் கைவல்ய நிலையை அடைதற்கேதுவான சன்மார்க்க முயற்சியிலும் ரஜோகுண, தமோ குணங்கள் மேலிடும்போது விஷய நுகர்ச்சியான சம்சார மார்க்கத்தில் வெளி முகப்பட்டு தீயவழிகளிலும் பிரவிர்த்திக்கின்றது. ஆகையால் புத்திமான்கள் வைராக்கியத்தால் விஷயப் பிரவிருத்தியைத் தடுத்து நிரந்தர அப்பியாசத்தால் கைவல்யம் பெற முயற்சிக்க வேண்டும். மனதை ஸ்திரப்படுத்தும் முயற்சியே அப்பியாசமெனப்படும்.

105. விஷயங்கள் காந்தத்திற்கும் மனம் அயத்திற்கும் சமானம். விஷயங்கள் மனத்தை ஆகர்ஷித்து மனத்தின்கண் காம, குரோத முதலிய தோஷங்களை உண்டு

பண்ணுகின்றன. விஷயங்களாலன்றி மனதிற்குச் சுபாவத்தில் காமக் குரோதாதி தோஷங்கள் கிடையா. விஷயங்களை மனம் கிரகிக்கிறதென்றால் மனம் தான் கிரகிக்கும் விஷயங்களின் பரிணாமத்தை அடைகிறதென்பது அர்த்தம்.

106. சுத்தமான விருத்தியில் புருஷனுடனும், அசுத்தமான விருத்தியில் விஷயங்களுடனும் மனம் சம்பந்தம் அடைகிறது. மனம் புருஷனிடம் நேரில் சம்பந்தப்படும்போது அறிவு மயமாகவும் விஷயங்களுடன் இந்திரியங்கள் மூலியமாய் சம்பந்தப்படும்போது பரிணாமம் உள்ளதாகவும், அதாவது எதிர்ப்படு விஷயங்கள் மயமாகவும் ஆகிறது. மனதுக்கு புருஷனோடு சம்பந்தமில்லாத காலமே இல்லாமையால் சிலர் மனதையே ஆத்மாவென்று பிரமிக்கிறார்கள்.

107. இதுவரை விவேகம் இல்லாமையால் விஷயாதிகள் மனதைப் பற்றிக் கொண்டிருந்தன. அதனால் மனம் சம்சார மார்க்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இப்போது புருஷன் வேறு, பிரக்ருதி வேறு, என்ற விவேகம் ஏற்பட்டு விட்டதால் இனி அந்த மனம் கைவல்ய பாவனையை நோக்கிச் சென்று பேரானந்தம் அடைய முயற்சிக்கும்.

108. மனித ஜன்மம் சர்வோத்தமமானது. தேவ ஜன்மத்திலும் இது சிரேஷ்டமானது. ஆனால் ஒரு மனிதன் தனது ஜன்ம லக்ஷியத்தை அறியவும் அடையவும் தவறினால் அவனைப் போன்ற தாழ்ந்த ஜன்மம் வேறொன்றும் இருக்க முடியாது. உண்ணல், உறங்கல், மைதுனம் என்பவைகளோடு மனிதன் வேலை முடிந்து விடவில்லை. இவை எல்லா ஜீவராசிகளுக்கும் பொது

வானவையே. இந்த அனுபவத்திற்கு உயர்ந்த மனித ஜன்மம் வேண்டுமென்கிற அவசியமில்லை. நான் யார், இவ்வுடல் ஏது? எனக்கு இவ்வுடல் சம்பந்தம் எப்படி வந்தது? எனது உண்மை நிலையை அறிவதும் அடைவதும் எப்படி? என்ற விசாரணையுடைய மனிதனே உண்மை மனிதனுவான். இந்த ஜன்மத்தில் அவன் நிறைவேற்ற வேண்டிய கடமையும் அதுதான். இந்த முக்ய கடமையைச் செய்யாமல் உலகை எல்லாம் ஒரு குடைக்கீழ் அரசாட்சி புரிந்தாலும், அப்படிப்பட்டவன் ஜன்மமே வியர்த்தந்தான். அது மட்டும் அல்ல. பிரம்ம ஹத்தி தோஷமும் அவனைப் பீடிக்கிறது. ஆகையால் புருஷ ஜன்மம் எடுத்தோர் புருஷார்த்தத்தை அவசியம் பெறுதல் வேண்டும். சற்குரு கடாக்ஷமின்றி இது கிடைப்பதில்லை. புத்திமான்கள் குரு சேவை செய்து தன்யராகக் கடவர்.

ஓம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யோகவிளக்கு அநுபந்தம்

முகவுரை

யோகவிளக்கு, என்றதுமே சன்மார்க்க சாதனங்களில் ஒன்றான யோகப் பிரிவைப்பற்றி ஞாபகம் வரலாம். இங்கு "யோகம்" என்னும் சொல் ஜீவப் பிரம்ம ஐக்கியத்தையே பொருளாக உடையது. இச்சிறு நூல் ஆத்ம சாட்சாத்காரத்திற்கான நேர் சாதனத்தைத் தெளிவா யுரைத்தலால் சன்மார்க்க நாட்டமுள்ளோர்க்கு இது தக்க வழி காட்டியாக விளங்குமென்பது திண்ணம். பதினாறு செய்யுட்களைக் கொண்ட இதை ஸ்ரீ முனிவர் தமது 16-வது வயதிலேயே இயற்றினாரென்பது குறிப்பிடத் தக்கது.

இத்துடன் சேர்த்துள்ள 64 மயில் கண்ணிகளும் அரிய கருத்துக்களை எளியநடையில் விளக்கி இந்நூலின் பொருளை மேலும் தெளிவாக்குவனவா யிருத்தலால் சாதகர்க்கு இவையும் பேருதவியாயிருக்கு மென்பதில் சம்சயமில்லை.

இங்ஙனம்

சேத்தூர்,
20-10-45.

ஸ்ரீ ஸ்வாமி, சச்சிதானந்த சிவம்

உ

சிறப்புப்பாயிரம்

திருவருணை

ஸ்ரீ நடனானந்த ஸ்வாமிகள் இயற்றியது

குறள்வெண்பா

யோக விளக்கா லுறுமே சிவானந்த
போகமெனு மின்பப் புணர்வு.

உ

ஓம் தத் ஸத்:

அனுபந்தம் யோகவிளக்கு

மங்கலம்

குறள் வெண்பா

ஐங்கரனைச் செவ்வேளை அம்பிகையை என்ஞான்றும்
சங்கரனைச் சற்குருவைச் சார்.

பாயிரம்

எண் சீர் விருத்தம்

ஆதியே யனாதியே யறிவே போற்றி
அருவுருவா யெங்குநிறை யமலா போற்றி
சோதியே துரியமணிச் சுடரே போற்றி
சுகபரிபூ ரணவின்பத் தோய்வே போற்றி
ஓதியே யுணரரிய வொருவா போற்றி
உரைமனங் கட்கெட்டாமெய் யுணர்வே போற்றி
பாதியே மதியணிந்த பரனே போற்றி
பராபரமாம் பழம்பொருளே போற்றி போற்றி. 1

போற்றியே கரிமுகமெய்ப் பொருளே போற்றி
புனிதற்கொன் றுரைத்த குகன் பொற்றாள் போற்றி
சாற்றியதோர் சிவானந்த யோகமென்னுஞ்
சதிரான பதினாறு முணர்ந்து வாசி

ஏற்றியே விருடீர வேற்றிப் பின்ன
　　ரிறைவனருட் பெரும்பதத்தி லிசைந்து வாழத்
தேற்றியே தெரித்திட்டேன் செகத்தோ ரெல்லாம்
　　சிவானந்த யோகநிலை தெளியுமாறே. 2

நூல்

1

தெளிவிடையே தெளிவுறலாற் றீர்ந்தே கங்குல்
　　தென்னவனார் தரிசனமும் தீரும் தீரும்
அழிவுதனை யகற்றியபின் னமலன் றனை
　　அடைந்திடற்கா மந்தரங்க மறையக் கேளே
இழிவுதனை வையாதே இடுக்கந் தீர்ந்தே
　　இன்பமதா யருட்சுடரா யிருடியாகப்
பொலிவுடனே யெடுத்துரைத்தேன் புவிமேல் யானே
　　புனித முடை யென்மகனே புதுமைகேளே.

2

புதுமையதில் மனமதுதான் பொருந்தும் வண்ணம்
　　புருவநடு முனைதனிலே வாசியேற்றி
பதுமையென விருந்துமேல் பார்க்கி லிங்கே
　　பம்பரம்போல் சுழன்றாடும் பார்ப்பாய் மேலே
கதுமெனவே பீஜத்தி லிருந்து மேலே
　　கதிரவன்றன் சுடர்கொப்பக் கனன்றே யோடும்
சதியறுஞ் சக்கரங்க டமைத் தாண்டி மேலே
　　சரிவழியாம் பிடரிவழி சார்ந்தங் கோடும்.

3

ஓடுகையில் சிறுவாச லொடுக்கந் தேர்ந்தே
　　உத்தமனே உள்ளிலறு கோணந் தாண்டி
ஆடுகையில் காற்றாடி யனைய ஆடி
　　அப்பனே நின்காதில் நாதங் கேட்கும்

மேடைமிசை யிருந்துகளைப் பாரி யப்பால்
மேல்வழியாம் உச்சிநடுப் பாதை மேவித்
தேடுகையி லூரிமிகத் தெளிக்கும் பாரே
தித்திக்குந் தெவிட்டாத வமுதந் தானே.

4

தானான வமிழ்ததனை யுண்ட காலை
தணலதுதான் மிகவீசத் தயக்கந் தோன்றும்
வானான வண்ணங்க ளெந்துந் தோன்றும்
வழுத்தரிய பெருவெளியும் வயங்கு மாங்கே
ஊனான கண்காண வுயர்ந்த சூக்ஷ்ம்
உத்தமனே நின்னறிவி லொளிருங் காணே
வீணான தூலமிங்கே துடி துடிக்கும்
மெய்ஞ்ஞான வானந்த லகரி சேரும்.

5

சேருமந்த லகரியதாற் செய்கை யோயும்
சிவானந்த போதமதாற் சிந்தை தேர்ந்து
கூறரிய குருநிலையைக் குறுகு மப்போ.
குருகுரென வாசியதுங் குன்றிப் போகும்
தேருமிந்தத் தேகமிசை நடுக்கந் தோன்றும்
தெவிட்டலுடன் சிறுசத்த முள்ளே கேட்கும்
ஆருமறியாத பலவற்பு தங்கள்
அப்பனே கண்டமத்தி தனிலே தோன்றும்.

6

தோன்றுமடா சுகநிலையந் தோன்றும் மற்றும்
தோற்றாத காட்சி யெல்லாம் தோற்றுங் காணே
தூண்டுமடா துரிய வழி தூண்டும் தூண்டிற்
துக்கசுக வனுபவங்கள் தொடரா வுன்னை

தாண்டுமடா சுத்தசதா சிவத்தில் நாட்டம்
தனையறியாத் தனிநிலையுஞ் சாருங் கண்டாய்
வேண்டுமடா மெய்யறிவு மன்பு மிக்க
விளம்பியவிம் மான்முறையை அறியத்தானே.

7

அறியவே யானந்த யோகி யாவாய்
ஆருமுனக் கிணையில்லை யவனி மீதே
தெரியவே சிவானந்தன் சிறப்புத் தன்னை
சித்த முறக் கண்டவுடன் சித்தி வாய்க்கும்
உரிய பல பெருமையெலா முன்னைச் சாரும்
உத்தமனே யிச்சையொருக் காலும் வேண்டாம்
தெரியாத மாந்தரெனத் திகழ வேண்டும்
செத்தவர்போல் மேதினிவாய் தோன்ற வேண்டும்.

8

தோன்றவே சோம்பனெனத் துலங்க வேண்டும்
துணைகொள்ள வருமவரைத் துரத்தல் வேண்டும்
சீண்டாதே செகமெல்லாம் சிரிக்க வேண்டும்
சீச்சியிவ னொரெனவு மிகழ்தல் வேண்டும்
தாண்டவே படியனைத்தும் தாண்டி நின்றே
தன்மையுள்ள சீடர்களைத் தயவாற் கொள்வாய்
வேண்டியசோ தனைகளெலாஞ் செய்த பின்பே
மேலான விம்முறையைக் கிருபை கூறே.

9

கூறவே குறிப்பறிந்து கூறல் வேண்டும்
கூர்மையிலார்க் குண்மை நெறி கூறல் கூடா
ஆரவே அடையாள மளிக்கு முன்பே
அவசரமாய்த் துடிப்பாரை யகற்றல் வேண்டும்

தோவே யிம்முறையைத் தெரியச் சொன்னால்
தெரியாதார் மூடரெனச் சிரிப்பார் காணே
தூரவே யிருந்தொன்றுஞ் சொல்லா தேதான்
தூங்காமற் றூங்கியருட் சுகத்தைக் காரே.

10

காக்கவே ககனவெளி கண்டப் பாலே
காரணமாம் பூரணத்தைக் கலந்தே யொன்றாய்
ஏற்கவே ஏகாந்தத் திலகு வாயே
எண்ணாத எண்ணமெலாம் இறந்து போமே
தாக்கிடவே தன்மயமாய் தான் விளங்கி
தனித்திருக்கும் தவப் பெரியோன் தானுமாவாய்
போக்குவர வற்றபரம் பொருள் நீயாவாய்
புனர் ஜன்மமில்லையினிப் புரிந்து கொள்ளே.

11

கொள்ளுமந்தக் கொடிதாய் தூக்கம் நீத்தே
குடிகெடுக்கும் பேதைபொருள் குறிப்பும் விட்டே
தள்ளுவாய் தன்செயலாந் தனைவே ரோடே
தாவுமனந் தனையடக்கிச் சாந்தம் மேவிக்
கொள்ளுவாய் கொன்றையணி குரவன் பொற்றாள்
குறிப்பினையே குதூகலமாய் குலவு வாயே
விள்ளுவாய் இம்முறையை விளக்கமாக
விளங்கியே விமலதே சிகனாய் நீயே.

12

தேசிகனார் தெளிவுபெறச் செப்புஞ் சூட்சம்
தெரியாதே சிறியேனுந் தியக்கத் தோடே
கூசியே வுட்கார்ந்து குறியைப் பற்றி
கூர்மையுட னோக்குங்கால் குதித்தா ளம்மை

வேசியாய் முன்னின்று விபரம் சொன்னாள்
விளங்காத சூட்சமெல்லாம் விளங்கச் சொன்னாள்
ஆசியே வழங்கியெனை அணைத்து முத்தம்
ஆவலுடன் செய்த பின்ன ரகன்று விட்டாள்.

13

விட்டவவள் திருவடியை மேவியே யான்
விதியெனவே பூசித்து காக்க லுற்றேன்
தொட்டதொரு குறிப்பதனைச் சொல்லொணாதே
தொந்தரவில் வைத்தகன்றாள் தூயோன் தேவி
கட்டுதற்குங் கந்தையிலை காவல் காக்கக்
கடும்பசியாற் பஞ்சடைந்தேன் கண்கள் சோர்ந்தே
இட்டதிரு வருட்பணியை இயற்றா விட்டால்
ஏதுசெய்வா ளோவென்றே யஞ்சினேனே

14

அஞ்சியே அவளிட்ட ஆணையின் னாள்
அந்தரங்கம் தனையெளிதா யறிந்தேன் பின்னர்
மிஞ்சியே என்றனுடன் மேவி னோர்கள்
மிதமிஞ்சி நிலைகுலைந்த விதந்தானேதோ
பஞ்சுபோற் கிடந்தங்கே பரிதபித் தேன்
பரிந்திடற் கோர் துணையுமின்றிப் பதறி யெய்த்தேன்
கொஞ்சுமொழி குமரியவள் குறுகி யப்போ
கூறிய சொல் கொடுமை நிறைந் திருந்த தேனே

15

இருந்த கடுஞ்சொல்லா லுள் ளிடிந்த நேரம்
எழிலுடையா ளெழுந்தாளென் மடியைப் பற்றி
பருந்து விரற் பிடிப்பிலுறும் பட்சி யேபோல்
படபடெனத் துடிதுடித்தே பதைத்தேன் நெஞ்சம்

வருந்தியிவ னெவ்வளவோ மயக்கப் பார்த்தும்
மாயவலை சிக்காவென் மதியை மெச்சிப்
பிரிந்தபொழு தற்புதங்கள் பேசிச் சென்றாள்
பேசரிய புதுமையெலாம் பிறங்கக் கண்டேன்.

16

கண்டவதி சயங்களெலாங் கழறற் பாற்றோ
காணரியாக் காட்சியெலாங் கண்டே னம்மா !
அண்டசரா சரங்களெலாம் ஆடியோயும்
அருள்நிலையும் பொருள்நிலையும் அறியச் சொன்னேன்
விண்டதொரு மெய்ப்பொருளை வெளியாக் காட்டும்
மெய்ஞ்ஞான தேசிகர்தாள் பேவிப் பண்பால்
தொண்டுபல புரிந்தருளைத் தொடர்ந்தா லெல்லாந்
துலங்குவதோ டம்மைபதத் தோய்வு மாமே.

வாழ்த்து

சன்மார்க்கம் வாழ்க தவம் வாழ்க யோகமெனும்
பொன் மார்க்கம் வாழ்க பொலிந்து.

ஓம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மயில் கண்ணி

ஆடுமயிலே நடமாடு மயிலே—பர
மானந்த நிலையில்நின் றாடுமயிலே. 1

நம்மையறி வுருவாய்க் கண்டவிடத்தே—சக
மும்மையு மறைந்தனவென் றாடுமயிலே. 2

நம்மை நாம் கண்டுகொண்டோ மாதலினாலே—இறப்
பெம்மையு மெமக்கிலையென் றாடுமயிலே. 3

விரகநோய் நமக்கில்லை யாதலினாலே—பவ
நரகவாய் நாடோமென் றாடுமயிலே. 4

அடிமுடிகண் டோமென் றாடுமயிலே—வினைக்
கொடிமுடி விண்டோ மென்றாடுமயிலே. 5

சித்தம் தெளிந்தோமென் றாடுமயிலே—நாம்
சிவவடி வானோ மென்றாடு மயிலே. 6

ஆசைக்கிடங் கொடோமென் றாடுமயிலே—புகழ்
வேசைவலைப் படோமென் றாடுமயிலே. 7

நாமார்க்குங் குடியல்லோ மாதலினாலே—இனி
நமனையு மஞ்சோமென் றாடுமயிலே. 8

அகத்தை யறத்தொலைத்தோம் ஆதலினாலே—இந்தச்
சகத்தைக்கண் டஞ்சோமென் றாடுமயிலே. 9

மனப்பகை தவிர்ந்தோமென் றாடுமயிலே—காம
இனப்பகை யகன்றோமென் றாடுமயிலே. 10

மாயையை விரட்டினோமென் றாடுமயிலே—மனப்
பேயையும் துரத்தினோமென் றாடுமயிலே. 11

மறப்பும் நினைப்பு மற்றோ மாதலினாலே—நாம்
பிறப்பிறப் பற்றோமென் றாடுமயிலே. 12

பந்தம் பறந்ததனால் பரமார்த்தம்—வீடு
சொந்தம் இனி நமக்கென் றாடுமயிலே. 13

பாசத்தளைகளை யறுத்தோமதனால்—இனிக்
கோசக் குகை புகோமென் றாடுமயிலே 14

வாங்காமல் வாசிவாங்கும் வழியறிந்தோம்—அதனால்
தூங்காமல் தூங்குவோமென் றாடுமயிலே. 15

பதியியல் கண்டதுவாய் மன்னுநமக்கே—இனி
விதியியல் கிடையாதென் றாடுமயிலே. 16

எட்டிரண்டுங் கண்டுகொண்டோ மாகையினால் நாம்-இனி
தொட்டதெல்லாந் தங்கமேயென் றாடுமயிலே. 17

நன்றாக அறிந்தவன் ஞானி மயிலே—மனம்
குன்றாமல் இதில் ஏறிச் செல்லுமயிலே. 18

தூக்கிய காலதனைப் பாருமயிலே—பவம்
போக்கிட தவம் தன்னைச் செய்வாய் மயிலே. 19

ஓங்கார கலசத்தின் அமுர்த முண்டே—உன்
ஆங்காரக் கட்டை யெல்லாம் தாண்டு மயிலே. 20

உடலுக்கு உயிராக நின்றவன் தன்னை—உந்தன்
மடலுக்குள் மடக்கிடப் பாருமயிலே. 21

ஞானவெளி விளக்கைக் காணுமயிலே—பின்
ஊனப் பொருளை யெல்லாம் விடுமயிலே. 22

ஓசைஒடுங்குமிடம் பாருமயிலே—உந்தன்
ஆசையெல்லாம் விட்டுவிட்டு ஆடுமயிலே. 23

நானாரெனத் தருவித் தேடுமயிலே—அந்த
தேனாறு தன்னைக் கண்டு கொள்ளுமயிலே. 24

பேசாவெழுத்தைப் பாருமயிலே—பின்
பேசும் எழுத்தை யடக்கு மயிலே. 25

ஓம் எனும் பிரணவத்தைத் தேடு மயிலே—நீ
ஊம் எனும் உறுதிகொண் டாடுமயிலே. 26

கோணாமல் முனைதனில் செல்லுமயிலே—மனம்
நாணாமல் இதனை நீ காருமயிலே. 27

நாதவெளி கீதமதை நாடுமயிலே—இனி
காதலென்பதை யற ஒழிமயிலே 28

உட்கோண வளையமதில் செல்லுமயிலே—இந்த
சட்கோணம் தன்னையறிந் துண்ணுமயிலே 29

ஆணிநடு மேருகிரி சேருமயிலே—இதை
ஊணிநடு வீடதனைப் பாருமயிலே 30

ஒளியான உதயகிரி பாருமயிலே—இதை
வழியெனக் கண்டுகடைத் தேறுமயிலே 31

மூலம் வட்டமீதில் நின்றாடுமயிலே—இவை
கால மோட்டும் முத்தியென்று கொள்ளுமயிலே 32

கண்ணுக்குள் விண்ணொளியைக் காண்பாய்மயிலே—இது
உண்ணுக்குள் உற்ற தென்றறிவாய் மயிலே. 33

கரணவுறவை நீக்கக் கற்றுணர்ந்தால்—பின்னர்
திரணமெவ் வுலகுமென் றாடுமயிலே. 34

எதைக் கண்டா லெல்லாமுங் கண்டதாகுமோ—தேடி
யதைக் கண்டார்க் கயர்வேதென் றாடுமயிலே. 35

உலகம் விழித்தவிடத் துறக்கமுற்றால்—அங்கு
இலகும் பரநிலையென் றாடுமயிலே. 36

இரவுபக லற்றநிலை யெய்துமறிஞர்—பின்
மருவுநிலை வேறிலையென் றாடுமயிலே. 37

சொல்லும் பொருளுமற்ற எல்லைகண்டால்—அங்கு
அல்லும் பகலுமேதென் றாடுமயிலே. 38

குருமொழி கொண்டவர்க் கல்லால் கூடலுண்டோ-மோன
ஒருமொழியின் உண்மைதானென் றாடுமயிலே. 39

சாகாக்கால் வேகாத்தலை கண்டறிந்தாலே—அன்றே
போகாப் பவநோய் போமென் றாடுமயிலே. 40

நெருப்பாற்றின் மயிர்ப்பாலம் தாண்டிவிட்டால்—வினை
யிருப் பேதும் மிஞ்சாதென் றுடும்பிலே. 41

சுட்டறிவுக் கெட்டாத சோதிப் பொருளாம்—நம்மைத்
தொட்டிழுக்கவ ல்லதென் றுடுமயிலே. 42

முக்காலமுங் கடந்த முதற்பொருளாம்—நம்மை
எக்கால மென்செயுமென் றுடுமயிலே. 43

யமமுதற் சாதனங்கள் சித்தியதனால்—வெய்ய
நமற்குமோர் நமன் நாமென் றுடுமயிலே. 44

துரியங் கடந்த சூட்சி கண்ட நமக்கே—நூலில்
தெரியும் பொருளென்னவென் றுடுமயிலே. 45

முப்பாழுந் தாண்டுமொரு வழியறிந்தோம்—இனி
எப்பாலுந் துன்பிலையென் றுடுமயிலே. 46

உடம்பின் பயனைப் பெற்றோ மாதலினாலே—இனி
இடும்பை நமக்கில்லையென் றுடுமயிலே. 47

நாமம் தரித்தோமென் றுடுமயிலே—கவலை
நம்மையினி நாடாதென் றுடுமயிலே. 48

அங்கும் இங்கும் எங்கும் நிறை ஆதிப்பொருளை—மனம்
சங்கையின்றித் தோய்ந்திடநின் றுடுமயிலே. 49

சோமனமிழ் துண்டோமென் றுடுமயிலே—அதனால்
காமனை ஜயித்தோமென் றுடுமயிலே. 50

முத்திநெறியில் நின்ற முனிவரரை—அற்ப
சித்திகளென்செயுமென் றுடுமயிலே. 51

ஞானப்புத்திரரைப் பெற்றுய்ந் தவர்க்கெலாம்—ஏதுக்
கூனப் புத்திரரிங் கென்றுடுமயிலே. 52

அறியுமறிவே தானவர்க்கோர்—பின்னர்க்
குறியுங்குணமு மேனென் றுடுமயிலே. 53

தானே தானவர் வாழ்கிலையே—ஒப்பில்
வானோர்க் குயருலகென் றுடுமயிலே. 54

நட்டநடு வீட்டைக் கண்டுகொள்ளு மயிலே—அதில்
இட்டமுடன் தங்கியுண்மை விள்ளுமயிலே. 55

ஒட்டாது பாசவினையோடும் மயிலே—கிட்ட
எட்டாது என்றறிந்து கொள்ளுமயிலே. 56

ஒருமொழி யானதை யுண்ணுமயிலே—இதைக்
குருமொழியாகவே கொள்ளு மயிலே. 57

குருமொழி சிரமதில் ஊன்றிமயிலே—இந்த
அருள்மொழி எட்டெட் டறைந்தேன் மயிலே. 58

நித்யானந்தன் பதம் நாடி மயிலே—இதைச்
சித்தியா யுரைத்தேன் சிவானந்தன் மயிலே. 59

முத்தரெல்லாம் வாழியென் றாடுமயிலே—நம்
சித்தரெல்லாம் வாழியென்றாடுமயிலே. 60

பக்தரெல்லாம் வாழியென் றாடுமயிலே—பரம்
காத்தோரெல்லாம் வாழியென் றாடுமயிலே. 61

மங்களம் மங்களமென் றாடுமயிலே—அருணை
தங்கும்சதா சிவனை நாடுமயிலே. 62

அருணை சிவானந்தன் சொல்லறிந்த நல்லோர்—ஈசன்
கருணை யடைந்தாரென் றாடுமயிலே. 63

தவம் தவம் என்றிதனைச் சாற்றுவோர்க்கெலாம்—இனி
சுபம் சுபம் என்று சொல்லி யாடுமயிலே.
ஆடுமயிலே நட மாடு மயிலே—பர
மானந்த நிலையில் நின்றாடு மயிலே. 64

ஓம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ சிவானந்த ஞானமிர்தமும் அனுபந்தம்
யோகவிளக்கு மயில்கண்ணியுள்பட
முற்றுப் பெற்றது.

The Jupiter Press, Ltd., Madras—MS. 88—12-45.

உ

ஸ்ரீ சிவானந்த நிலயம்

சென்னை

மெய்யன்பர்காள்!

இந்நிலயத்தில் திருவண்ணாமலை மஹான் ஸ்ரீ சிவானந்த முனிவரவர்களால் அருளிய ஞான நூல்களும் அவரது திருவுருவப் படம் பல சைஸ்களிலும் ஸ்ரீ முனிவர் பிரசாதமும் கிடைக்கும். வேண்டும் அன்பர்கள் கீழ்க்கண்ட விலாசப்படி எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதில் ஸ்ரீ சிவானந்த ஞானாமிர்தம் என்ற புண்ணிய நூல் பல பாஷைகளில் உள்ளபடியால் மொத்த ஆர்டர்களுக்கு உடனே அவர்கள் விரும்பிய பாஷைகளில் அச்சிட்டு அனுப்பப்படும்.

இங்ஙனம்

நேமம். செ. முத்துக்குமாரசாமி செட்டி,
ஸ்ரீ சிவானந்த நிலயம்;
15, பரமசிவ செட்டித் தெருவு,
பார்க் டவுன், சென்னை.

உ

திருவண்ணாமலை

ஸ்ரீ சிவானந்த ஆஸ்ரம வெளியீடு

(மஹான் ஸ்ரீ சிவானந்த முனிவர்கள் அருளியவை)

	ரூ.	அ.	பை
(1) அருணாசல மான்மியக் கும்மி	0	1	6
(2) ஸ்ரீ சிவானந்த ஞானமிர்தம் 108 உபதேசமும், யோகவிளக்கு மயில் கண்ணி உள்பட	0	8	0
(3) ஸ்ரீ ஞானமிர்தம் வசனம் 108 உபதேசம் அடங்கியது	0	4	0
(4) யோகவிளக்கு தனி—அச்சில்	0	2	0
(5) சோடஷ மலர்—அச்சில்	0	6	0

(பக்தர்கள் இயற்றிய...)

(1) ஸ்ரீ முனிவர் சரித்திரம்... புலவர், கே. தாசரதி... எழுதியது. அச்சில்

(2) ஸ்ரீ சிவானந்த மாலை செய்...

...கிடைக்குமிடம்...

ஸ்ரீ சிவானந்த நிலயம், 15, பா...
பார்க் டவுன், சென்னை.